* 388 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the Municipal Council of Vaniyambadi, North Arcot district has applied for a loan to the Government for a Water Supply Scheme to be embarked upon so as to get drinking water from river Palar, and

(b) if so, what action was taken ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) வாணியம்பாடி நகராட்சியில் நீர் வழங்குத்திட்டம் ஒன்றைச் செயல்படுத்துவதற்கு ரூ. 30·65 லட்சம் கடனுதவி அளிக்கக் கோரும் தீர்மானத்தின் நகல் ஒன்று 17—6—1967 அன்று வந்துள்ளது.

(இ) வாணியம்பாடி நகராட்சி ஆணையாளர் 16—6—1967 அன்று நகராட்சி மன்றம் கோரும் கடனுதவிக்கான விண்ணப்பத்தை தலைமைப் பொறியாளருக்கு அனுப்பியுள்ளார். இது தலைமைப் பொறியாளரின் பரிந்துரையுடன் வந்ததும், அதன் மீது மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

THIRU K. VINAYAKAM : Sir, whereas Vaniyambadi is a very important centre of tanning of hides and skins and the dirty waters that flow out of these factories result in all sorts of diseases, will the Government think of the possibility of expediting these drinking water supply schemes as early as possible and do not postpone them for their own convenience ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : Sir, for the very reason detailed by my hon. Friend, the matter is under the active consideration of the Government.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவடைந்தன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒற்றிவைப்புத் தீர்மானம்.

கல்லூரிகளில் தாழ்த்தப்பட்ட, பின்தங்கிய மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள விகிதாசாரப்படி இடங்கள் கிடைக்காமை.

திரு. கே. பி. எஸ். மணி : கனம் சபாநாயகர் அவர்களே, தமிழக அரசினர் கல்லூரிகளிலும், தனியார் கல்லூரிகளிலும் தாழ்த்தப்பட்ட, பின்தங்கிய சமூக மாணவர்களுக்கு அவர்கள் வேண்டும் குரூப்புகளை முறையே 16 சதவீதம், 25 சதவீதம் விகிதாசாரப்படி ஒதுக்கித்தராமல் மார்க் என்ற அடிப்படையில் உயர்த்தி வைத்துக்கொண்டு பிரின்சிபால்கள் இடம் கொடுக்காமல் தடைசெய்வதால் நூற்றுக்கணக்கானவர்கள் கல்லூரிகளில் சேரமுடியாமலும், பிற்காலத்தில் வேலை வாய்ப்பும், உயர் பதவிகளுக்கும் வராமல் தடுக்கும் மறைமுகத் தடையாக உள்ளது என்ற அவசரப் பொதுமுக்கியம் வாய்ந்த விஷயத்தை விவாதிக்க சட்ட மன்றக் கூட்டத்தை ஒற்றிவைக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்காகப் பேரவையின் நடவடிக்கைகளைத் தள்ளிப்போட வேண்டியதில்லை. ஆகையால் பேரவைத் தலைமை இதற்கு இசைவு கொடுக்கவில்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.